1979 பிப்ரவரி 26]

தென் ஆற்காடு மாவட்ட நலப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம்.

*வினா எண் 190—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடைகுயளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரசினர் நல ஆரம்பப் பள்ளியில் (Welfare School) பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒன்றாம் தேதி சம்பளம் வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1977-ம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் நாள் வெளியிடப்பட்ட நிதித்துறை ஆணையின்படி 1977 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-லிருந்து பணம் எடுக்கும் அலுவலர் (Drawing Officer) தனது அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் தனது தலைமையிடத்திலுள்ள கருவூலத்திலோ அல்லது துணைக் கருவூலத்திலோ தான் பணம் எடுக்க வேண்டும். தலைமையிடத்திலுள்ள பணியாளர் ஊதியம் மற்றும் இதர செலவினங்களைத் தவிர பிற பணியாளர் ஊதியம் மற்றும் செலவினங்கள் வங்கி காசோலை (Bank Draft) மூலம் தான் கொடுக்கப்பட வேண்டும். இதனால் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள அனைத்து அரிசன நலப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கடலூர் மாவட்ட அரிசன நல அலுவலர் அலுவலகத்தில் மாதாந்திர ஊதியப்பட்டியல் தயார் செய்து கடலூர் தலைமைக் கருவூலத்தில் பரிசீலிக்கப்பட்டு வங்கி மூலம் காசோலை (Bank Draft) பெறப்படும். அக் காசோலை விழுப்புரம், சிதம்பரம், விருத்தாசலம் மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்ட தனி வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். தனி வட்டாட்சியர் வங்கியில் மாற்றி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவார்கள். வட்டாட்சியருக்கு குறைந்தது இரண்டு வட்டங்கள் எல்லையாக இருப்பதால் ஒரே சமயத்தில் இரண்டு வட்டங்களுக்கும் செல்ல முடியாததால் முதல் நாள் ஒரு வட்டத்திலுள்ள பள்ளி ஆசிரியர்களும் மறுநாள் அடுத்த வட்டத்திலுள்ள பள்ளி ஆசிரியர்களும் ஊதியம் பெறுகிறார்கள் ஊதியப்பட்டியலை மொத்தமாக தலைமைக் கருவூலத்தில் கொடுத்து மொத்தமாக காசோலை பெறுவதில் சில நடைமுறை தாமதங்கள் ஏற்பட்டதால் அரிசன நலப்பள்ளி ஆசிரியர்களுக்கு முதல் தேதியில் ஊதியம் வழங்க முடியவில்லை.

[1979 பிப்ரவரி 26

தற்போது ஏற்படுகின்ற காலதாமதத்தை தவிர்க்க தனி வட்டாட்சியரே தத்தம் எல்லைக்குட்பட்ட அரிசன நலப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஊதியப்பட்டியல் தயார் செய்து ஊதியம் வழங்க 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் தேதியன்று தக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது..

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, அரிசன நல ஆரம்பப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இன்னின்ன முறைகளில் சம்பளம் வழங்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அவர் குறிப்பிட்ட அந்த முறைகளிலே சம்பளம் வழங்கப்படுகிற போது ஆசிரியர்களுக்கு சம்பளம் கிடைப்பது சில மாதங்களில் 15 ஆம் தேதி வரைக்கும் கூடப்போய்விடுகிறது. எனவே இந்த முறையினைக் கடைப்பிடிப்பதால், அதன்படி ஒவ்வொரு பள்ளியின் தலைமை ஆசிரியரும் மாவட்டத்தின் தலைநகருக்குச் சென்று சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு வந்து அவர்கள் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்திற்கு ட்ராப்டாகவோ அல்லது செக்காகவோ கொடுத்தால் அவர்களுக்கு 2 அல்லது 3 தேதிகளுக்குள்ளாவது சம்பளம் கிடைக்க வழிவகை ஏற்படும். ஆகவே அந்த முறையை ஏற்படுத்த அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து தலைமை ஆசிரியர்கள் சென்று மொத்த சம்பளத்தையும் வாங்கி வருவதற்கான பயணப்படி சரியாகக் கொடுக்கப்படுவதில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? அப்படியென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் இந்தத் தலைமை ஆசிரியர்கள் சென்றுதான் ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைப் பெற்றார்கள். ஆனால் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் தேதி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்திலேயே ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை வழங்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறோம். பயணப்படி தருவது பற்றி இங்கே குறிப்பு இல்லை. அப்படி வழங்கப்படவில்லை என்றால் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் போன்றல்லாது இந்த அரிசன நலப்பள்ளிகள் தனியாக இருக்கின்றன. அவ்வாறு இல்லாமல் இதுவும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் போன்றே இருந்தால்

நல்லது. அப்படி ஒரு முறையை ஏற்படுத்தினால் ஜாதி வித்தியாசம் ஏற்படாது. ஆகவே இது பற்றி அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் எதிர் காலத்தில் அவரது பிரச்சனைக்கு தொடர்பு ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூர் அருகே இரயில்வே பாலம்.

* வினா எண் 191—திரு. கு. வடிவேல : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கரூரில் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ன் குறுக்கே இருக்கின்ற இரயில்வே பாதையில் மேம்பாலமோ அல்லது சுரங்கப் பாதையோ கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திரு. கு. வடிவேல : கரூருக்கு அருகாமையில் திருச்சியிலிருந்து கரூர் வரையில் இருக்கக்கூடிய ரெயில்வேப்பாதையில் பல மாநிலச் சாலைகள், தேசியச் சாலைகள் குறுக்கிடுகின்றன. கரூரில் தேசிய நெடுஞ்சாலை குறுக்கிடும் இடத்தில் ரெயில்வேகேட் மூடப்படும் போது போக்குவரத்திற்கு பெரிதும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே அதுபற்றி அரசு ஒரு முடிவெடுத்து அங்கு ஒரு மேம்பாலமோ அல்லது கீழ்பாலமோ கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்திலுள்ள லெவல் க்ராஸிங்கை அகலப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை அந்தவிடத்தில் கட்டுவதற்கு அரசாங்கத்தினிடம் இப்போது பரிசீலனையில் இல்லை. ஆனால் கரூர் நகரத்திற்கு புறவழிச் சாலையில், தேசியச் சாலையில் ஒரு மேம்பாலம் சேர்க்கப்பட்டு மதிப்பீடு மத்திய அரசுக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.